பிரதமர் மோடி தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு ஒப்புதல்

புதுடெல்லி, செப்.19– நாடாளுமன்றம், சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் ஓட்டுப்பதிவுக்கு வகை செய்யும் 'ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு' பிரதமர் மோடி தலைமையில் நடந்த மந்திரி சபை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்ற பெயரில் ஒருங்கிணைந்த திட்டத்தை பா.ஜ.க. முன்மொழிந்து, கடந்த 2014ம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலும் இதை தெரிவித்தது. இது தொடர்பான விவாதங்கள் நீடித்து வந்த நிலையில், பா.ஜனதா அரசின் கடந்த ஆட்சிக்காலத்தில் இதற்கான முயற்சிகள் செயல்வடிவம் பெற்றன.

அதன்படி ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்து ஆராய முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 2ந் தேதி ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, நிதி ஆயோக் முன்னாள் தலைவர் என்.கே.சிங் உள்ளிட்டோர் இடம்பெற்று இருந்தனர்.

இந்த குழுவினர் ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவது தொடர்பாக பல்வேறு விஷயங்களை ஆராய்ந்தது. இது தொடர்பாக அரசியல் கட்சிகள், அமைப்புகள் மற்றும் பொது மக்களிடம் கருத்துகளும் கேட்கப்பட்டன.

ஜனாதிபதியிடம் அறிக்கை

பின்னர் இவற்றையெல்லாம் தொகுத்து, மீண்டும் அதனை பகுப்பாய்வு செய்த உயர்மட்டக்குழு கடந்த மார்ச் மாதம் ஜனாதிபதியிடம் அறிக்கையை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில், அனைத்து தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்துவது சாத்தியம் என உயர்மட்டக்குழு கூறியிருந்தது. அதன்படி ஒரே நாடு, ஒரே தேர்தலை 2 கட்டங்களாக செயல்படுத்தலாம் என பரிந்துரைக்கப்பட்டது.

முதல் கட்டமாக மக்களவை மற்றும் சட்டசபை தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்த வேண்டும் என்றும், இந்த பொதுத்தேர்தல் முடிந்து 100 நாட்களுக்குள் 2ம் கட்டமாக உள்ளாட்சி தேர்தல்களை (ஊராட்சி மற்றும் நகராட்சிகள்) நடத்த வேண்டும் என்றும் உயர்மட்டக்குழு பரிந்துரைத்தது. அனைத்து தேர்தல்களுக்கும் பொதுவான வாக்காளர் பட்டியல் பயன்படுத்த வேண்டும் எனவும் கூறியது.

தொங்கு நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றம் ஏற்பட்டாலோ, ஆட்சி கவிழ்ந்தாலோ மீதமுள்ள பதவிக்காலத்துக்கு மட்டும் இடைத்தேர்தல் நடத்த வேண்டும். ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பாக 18 அரசியல் சாசன திருத்தங்களை மேற்கொள்ள பரிந்துரைத்த இந்த கமிட்டி, இதில் பெரும்பாலானவற்றுக்கு மாநிலங்களின் ஒப்புதல் தேவையில்லை எனவும் கூறியிருந்தது.

இந்த திட்டத்தை அமல்படுத்துவது தொடர்பாக நாடு முழுவதும் விரிவான விவாதங்களை நடத்தவும், திட்டத்தை செயல்படுத்த குழு அமைக்கவும் பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

ராம்நாத் கோவிந்த் கமிட்டியின் இந்த அறிக்கை https://onoe.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டு உள்ளது. ராம்நாத் கோவிந்த் கமிட்டி அறிக்கை சமர்பித்த ஓரிரு நாட்களில் நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டது.

அதில் பா.ஜ.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலும் இந்த திட்டம் இடம்பெற்று இருந்தது.

இந்த நிலையில் பிரதமர் மோடி தலைமையில் மத்திய மந்திரிசபை கூட்டம் நேற்று நடந்தது. இதில் ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பான ராம்நாத் கோவிந்த் கமிட்டியின் அறிக்கை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. பின்னர் இந்த அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதை ரெயில்வே மற்றும் தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

2 கட்டங்களாக தேர்தல்

இது தொடர்பாக அவர் கூறியதாவது: ஒரே நாடு, ஒரே தேர்தல் ஜனநாயகத்தையும், மத்திய–மாநில உறவுகளையும் வலுப்படுத்தும். வேகமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தையும் உறுதி செய்யும். நல்ல நேர்மறையான பொருளாதார தாக்கங்கள் ஏற்படும்.

ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பாக விரிவான விவாதம் மூலம் அடுத்த சில மாதங்களில் ஒருமித்த கருத்தை மத்திய அரசு ஏற்படுத்தும். இந்த திட்டத்துக்கு ஏராளமான கட்சிகள் தங்கள் ஆதரவையும் தெரிவித்து உள்ளன. இந்த திட்டத்தை அமல்படுத்து வதற்காக ஒரு செயல்பாட்டுக்குழு அமைக்கப்படும். இந்த திட்டத்துக்கான விவாதங்கள் அனைத்தும் முடிந்ததும் வரைவு மசோதா ஒன்று உருவாக்கப்பட்டு தாக்கல் செய்யப்படும். இவ்வாறு முழு சட்ட நடைமுறைகளும் முடிந்தவுடன், ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான தேதியை முடிவு செய்யலாம்.

ஒரே நாடு, ஒரே தேர்தல் 2 கட்டங்களாக நடத்தப்படும். முதல் கட்டமாக நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களுக்கும், 2வது கட்டமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்தப்படும்.

ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான ஆலோசனையின்போது ராம்நாத் கோவிந்த் கமிட்டியிடம் கருத்து தெரிவித்தவர்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமானோர், குறிப்பாக ஏராளமான இளைஞர்கள் இந்த நடவடிக்கையை ஆதரித்து உள்ளனர். இவ்வாறு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 543 மக்களவை தொகுதிகளும், 4120 சட்டமன்ற தொகுதிகளும், 30 லட்சம் உள்ளாட்சி பதவிகளுக்கான இடங்களும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ரூ.24,475 கோடி உர மானியம், சந்திரயான்–4 திட்டத்துக்கும் அனுமதி

நிலவுக்கு விண்வெளி வீரர்களை அனுப்பும் 'சந்திரயான்–4' திட்டம், உர மானிய திட்டம், பிரதமரின் ஆஷா திட்டத்தை தொடர்வது ஆகியவற்றுக்கும் மத்திய அமைச்சரவை கூட்டத்தில் நேற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2040ம் ஆண்டுக்குள் நிலவில் விண்வெளி வீரர்களை தரையிறக்கி, அவர்கள் மீண்டும் பூமிக்கு திரும்புவதற்கான சந்திரயான்–4 திட்டத்துக்கும் மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்தது. இந்த திட்டத்தின்கீழ், நிலவின் மேற்பரப்பில் இருந்து மண், பாறைகள் பூமிக்கு கொண்டு வரப்பட்டு ஆய்வு செய்யப்படும். இத்திட்டத்துக்கு ரூ.2,104 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2024–25ம் ஆண்டு ராபி பருவ விவசாயத்துக்காக பாஸ்பேட், பொட்டாசிய உரங்களுக்கு ரூ.24,475 கோடி மானியம் அளிக்கும் திட்டத்துக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதன்மூலம் தேவையான உரங்களை விவசாயிகள் நியாயமான விலையில் பெற முடியும்.

பிரதமரின் 'ஆஷா' திட்டத்தை ரூ.35,000 கோடி மதிப்பீட்டில் தொடரவும் ஒப்புதல் அளித்தது. இதன்மூலம் விவசாயிகள் தங்கள் உற்பத்தி பொருட்களுக்கு நியாயமான விலையை பெற முடியும். இந்த நிதி மூலம் அத்தியாவசிய பொருட்கள் விலையும் கட்டுப்படுத்தப்படும் என்பதால் நுகர்வோரும் பயனடைவார்கள். விவசாயிகள், நுகர்வோர் பயனடையும் வகையில், பிரதமரின் ஆஷா திட்டத்தின்கீழ் விலை ஆதரவு திட்டம் மற்றும் விலை கட்டுப்பாட்டு நிதி ஆகியவற்றை மத்திய அரசு ஒருங்கிணைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நாடு முழுவதும் உள்ள பழங்குடியினரின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்த ரூ.79,156 கோடி மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள பிரதமரின் ஜன்ஜாதிய உன்னத் கிராம் திட்டத்துக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

குழந்தைகளுக்கான புதிய ஓய்வூதிய திட்டம்: மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் துவக்கினார்

சென்னை, செப்.19– 'குழந்தைகளுக்கான ஓய்வூதிய திட்டத்தை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், டெல்லியில் இருந்து காணொலி காட்சி மூலம் துவக்கினார்.

நாடாளுமன்றத்தில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், 2024–25ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை கடந்த ஜூலை மாதம் 23ந்தேதி தாக்கல் செய்யும்போது; "குழந்தைகளின் நிதி எதிர்காலத்தை பாதுகாக்க 'புதிய ஓய்வூதிய திட்டம்' தொடங்கப்படும் என்று அறிவித்திருந்தார். தற்போது அந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு உள்ளது. டெல்லியில் இருந்தபடி, என்.பி.எஸ். வாத்சல்யா ஓய்வூதிய திட்டத்தை காணொலி காட்சி மூலம் நிர்மலா சீதாராமன் நேற்று தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, நெல்லை உள்பட நாடு முழுவதும் 75 இடங்களில் இந்த நிகழ்ச்சி ஒரே நேரத்தில் ஒளிபரப்பப்பட்டது. தொடர்ந்து புதிதாக கணக்கு தொடங்கிய சிறுவர்களுக்கு அடையாள அட்டைகளையும், பெற்றோருடன் வந்திருந்த குழந்தைகளிடம் வழங்கினார்.

பின்னர் அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசும்போது, 'சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சமூக பாதுகாப்பை வழங்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளது. ஏற்கனவே அரசு ஊழியர்களுக்கான தேசிய ஓய்வூதியத் திட்டம், தனியார் துறையினர் மற்றும் பொதுமக்களுக்கும் விரிவு படுத்தப்பட்டு உள்ளது. அந்த வகையில் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் ஓய்வூதிய பலன்கள் அளிக்கும் என்.பி.எஸ். வாத்சல்யா திட்டம் அவர்களது பொருளாதார சுதந்திரத்திற்கு வழிவகுக்கும். குறைந்தது ஆண்டுக்கு ரூ.1000 செலுத்தி திட்டத்தில் சேரலாம். சேமிப்புத் தொகைக்கு உச்சவரம்பு ஏதுமில்லை. இந்தத் திட்டம், பிறந்த குழந்தைகள் முதல் 18 வயது வரையிலான அனைவருக்கும் பொருந்தும். அவர்களுக்கான சந்தா தொகையை பெற்றோர் அல்லது பாதுகாவலர் செலுத்தலாம். இந்தத் திட்டக் கணக்குகளை வங்கிகள், தபால் அலுவலகங்கள் மற்றும் ஓய்வூதிய நிதியங்கள் உள்ளிட்ட அமைப்புகள் வாயிலாகவும், இஎன்.பி.எஸ். (eNPS) என்ற இணையதளம் வாயிலாகவும் தொடங்கலாம்.

பாதுகாவலரின் ஆதார், ஓட்டுநர் உரிமம், பாஸ்போர்ட், வாக்காளர் அடையாள அட்டை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அடையாள அட்டை, தேசிய மக்கள்தொகை பதிவேடு போன்றவற்றை இருப்பிடத்திற்கான ஆதாரமாக காட்டலாம்.

பாதுகாவலரின் வருமானவரி நிரந்தர கணக்கு எண் (பான் கார்டு) அல்லது படிவம் 60ன் படி உறுதிமொழி அளித்தும் கணக்கு தொடங்கலாம். கணக்குத் தொடங்கப்படும் குழந்தையின் வயது சான்றாக, பிறப்பு சான்றிதழ், பள்ளி மாற்று சான்றிதழ் போன்றவற்றையும் அடையாளமாக பயன்படுத்தலாம். பாதுகாவலர் வெளிநாடுவாழ் இந்தியராக இருந்தால் அதற்கான வங்கி ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். இந்த திட்டத்தில் குழந்தைகளை சேர்க்க பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும்' என்றார்.

சென்னையில் நடந்த விழாவில் ரிசர்வ் வங்கி பொதுமேலாளர் இளங்கோவன், பத்திரிகை தகவல் அலுவலக கூடுதல் தலைமை இயக்குனர் எம்.அண்ணாதுரை, நபார்டு வங்கி துணை பொதுமேலாளர் சோமசுந்தரம், செயல் இயக்குனர் தன்ராஜ், பொதுமேலாளர் மோகன் உள்பட பலர் கலந்து கொண்டனர். விழாவில் புதிதாக கணக்கு தொடங்கிய சிறுவர், சிறுமியர் என 35 பேருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. விழாவில் பல்வேறு பள்ளிகளை சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர்.

குழந்தை பிறக்கும் போது அதனுடைய பெயரில் ஆண்டுக்கு ரூ.50 ஆயிரம் செலுத்தினால் அந்த குழந்தைக்கு 18 வயதாகும் போது ரூ.25 லட்சம் கிடைக்கும். குழந்தை தனது பருவ வயதை எட்டி, தாமாக வருவாய் ஈட்டி, சந்தா தொகையை செலுத்தினால், அவருடைய ஓய்வு வயதின்போது ரூ.12.5 கோடி வரை கிடைக்கும். குழந்தையின் மேற்படிப்பு, குறிப்பிட்ட வகை உடல்நலக் குறைபாடு, உடல் ஊனத்திற்கான சிகிச்சை போன்ற தேவைகளுக்காக, முதலீடு தொடங்கியதிலிருந்து 3 ஆண்டுகளுக்குப் பிறகு, மொத்த பங்களிப்பில் 25 சதவீதத்தை 3 முறை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். 18 வயது நிரம்பும்போது, இத்திட்டத்திலிருந்து வெளியேறிக் கொள்ளவோ அல்லது தொடர்ந்து தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் இணைவதற்கோ அனுமதி அளிக்கப்படும் என்று வங்கி அதிகாரிகள் கூறினர்.

முதியோர் உதவித் தொகை ரூ.6,000 வழங்கப்படும்: ஹரியாணா தேர்தலில் காங்கிரஸ் வாக்குறுதி

டெல்லி, செப். 19– ஹரியாணா வாக்காளர்களை கவரும் நோக்கில் 7 முக்கிய வாக்குறுதிகளை காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால், ஹரியாணா முன்னாள் முதல்வர் பூபிந்தர் சிங் ஹூடா, ஹரியாணா காங்கிரஸ் தலைவர் உதய் பன் மற்றும் கட்சியின் மூத்த தலைவர்கள் முன்னிலையில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே இந்த அறிவிப்புகளை வெளியிட்டார்.

ஹரியாணாவில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க, குறைந்தபட்ச ஆதரவு விலைக்கான சட்ட உத்தரவாதம் வழங்கப்படும், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும். கிரீமி லேயரின் வருமான வரம்பை ரூ. 6 லட்சத்தில் இருந்து ரூ. 10 லட்சமாக உயர்த்தப்படும், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதியோர், ஊனமுற்றோர் மற்றும் விதவைகளுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக ரூ. 6,000 வழங்கப்படும், அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும், வீடுகளுக்கு 300 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும், ரூ. 25 லட்சம் வரை இலவச மருத்துவக் காப்பீடு வழங்கப்படும் என்று காங்கிரஸ் கட்சி வாக்குறுதி அளித்துள்ளது.

1,643 கி.மீ. தூரத்துக்கு இந்தியா – மியான்மர் எல்லையில் ரூ.31 ஆயிரம் கோடியில் வேலி

உள்துறை அமைச்சகம் தகவல்

புதுடெல்லி, செப்.19– இந்தியாவும், மியான்மரும் 1,643 கி.மீ. எல்லையை பகிர்ந்து வருகின்றன. மொத்த எல்லையையும் சுமார் ரூ.31 ஆயிரம் கோடியில் வேலி அமைத்து பாதுகாக்கப்படும் என்று உள்துறை அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மணிப்பூர், மிசோரம், நாகாலாந்து மற்றும் அருணாசல பிரதேச மாநிலங்கள் மியான்மர் எல்லையோரம் அமைந்துள்ளன. இந்த எல்லை வழியாக பல்வேறு சமூக விரோத செயல்கள் அரங்கேறி வருகின்றன. குறிப்பாக ஆயுதம், வெடிபொருட்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தலுக்கு இந்த எல்லை அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக மியான்மரை சேர்ந்த கடத்தல்காரர்கள் மற்றும் பயங்கரவாத அமைப்புகளை சேர்ந்தவர்கள் மணிப்பூரில் பெரும் சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு ஓராண்டுக்கு மேலாக தொடரும் வன்முறை சம்பவங்களுக்கும் மியான்மர் நாட்டு பயங்கரவாத குழுக்கள் காரணமாக இருப்பதாக மத்திய அரசு குற்றம் சாட்டியிருந்தது.

இதைத்தொடர்ந்து மணிப்பூர் மாநிலத்தை ஒட்டிய மியான்மர் எல்லையில் வேலி அமைக்க மத்திய அரசு முடிவு செய்தது. அதன்படி 30 கி.மீ. தொலைவுக்கு அங்கே வேலி அமைக்கும் பணிகள் முடிவடைந்திருப்பதாக உள்துறை அமைச்சர் அமித்ஷா நேற்று முன்தினம் தெரிவித்தார். இதைப்போல ஒட்டுமொத்த 1,643 கி.மீ. எல்லையிலும் வேலி அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு பாதுகாப்புக்கான கேபினட் கமிட்டியும் ஒப்புதல் அளித்து இருப்பதாக டெல்லி வட்டாரங்கள் தெரிவித்து உள்ளன.

PUBLIC NOTICE

PUBLIC NOTICE is hereby given that the partnership heretofore subsisting between **Bhavesh R. Shah & Jyoti H. Shah**, carrying on the business of Share trading at First Floor, Door No. 2, Singana Naicken Street, Broadway, Chennai-600 003 under the name and style of **M/s. Rajesh Investments** stands dissolved w. e. f. 31st March 1995.

NOTICE is further given that any person, who has a valid and legitimate claim in the above Partnership firm, in relation to the shares of **Jindal Steel & Power Limited** ("**the Company**") held by the Partnership, is requested to notify the same to the **Registrar & Transfer Agent** ("RTA") of the Company i. e. **Alankit Assignments Ltd.**, Alankit Heights, 1E/13, Jhandewalan Extn., New Delhi-110 055 or the Company at its office situated at Tower A, Plot No. 2, Sector 32, Gurugram, Haryana-122 001, within 14 days from the publication of this notice. Otherwise, the Company will proceed to issue the Share Certificates to **Mr. Mayank Navinchandra Shah** jointly with **Mr. Subodh Bogilal Shah** (deceased shareholder) who is the shareholder in the records of the Company, unless a valid and legitimate claim is received by the Company or its RTA, within the above prescribed timeline. No claim will be entertained by the Company with respect to Original Share Certificate(s) subsequent to the issue / providing of the Share Certificate(s).

sd/-

Place : Chennai **Bhavesh Raichand Shah-ACSPS2333L**
Date : 19.09.2024 **Jyothi H. Shah-ACSPS2324R**

Rameshwar Media

kotak Kotak Mahindra Bank

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27BKC, C-27, G - பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின் கோடு - 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், வஹுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.
லேண்ட் மார்க்: சிட்டாரன் கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

உடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் உடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)-ன்படி அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ-ஏல விற்பனை அறிவிப்பு. பிளின்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி "பிளின்பிசாப்ஸல்" என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 05.04.2019 அன்று பிளின்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி இனி "பிளின்பிசாப்ஸல்" என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) கவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண் HOU/CHE/0716/304443 & HOU/CHE/0516/289859ன் கீழ். கீழே உள்ள விவரங்களின்படி திரு. ஆர். சிவக்குமார் & திருமதி. கே.பி. புஷ்பா ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 08.11.2018 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.1,45,78,974/-(ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தைந்து லட்சத்து எழுபத்தியெட்டாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து நான்கு மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்" வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விவரங்கள்	விவரங்கள்
ஏலத் தேதி	15.10.2024
ஏலம் நடைபெறும் நேரம்	மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்
ரிசர்வ் விலை	**சொத்து எண்.1க்கு ரூ. 24,00,000/- (ரூபாய் இருபத்து நான்கு லட்சம் மட்டும்)** **சொத்து எண்.2க்கு ரூ. 24,00,000/- (ரூபாய் இருபத்து நான்கு லட்சம் மட்டும்)**
டேவணித் தொகை டெபாசிட் EMD)	**சொத்து எண்.1க்கு ரூ.** 2,40,000/- **(ரூபாய் இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)** **சொத்து எண்.2க்கு ரூ.** 2,40,000/- **(ரூபாய் இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)**
Kyc உடன் Emd ஐ சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	14.10.2024 அன்று மாலை 5:00 மணி வரை (இந்திய நேரப்படி)
ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம்	**சொத்து எண்.1 : அட்டவணை** A - சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மொத்த 3 ஏக்கர் 49 செண்ட் நிலத்தில் 2 ஏக்கர் 75 செண்ட் அளவுள்ள காலி நிலம். அதன் சர்வே எண். 110/3, எண்.8, அய்யஞ்சேரி கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள் : வடக்கு: அரசுக்கு சொந்தமான பயன்பாடற்ற நிலம், தெற்கு: சர்வே எண்.110/4ல் உள்ள நிலம், கிழக்கு: சர்வே எண்.110/3ல் உள்ள மீதி நிலம் டிகஜேந்திரனுக்குச் சொந்தமானது, பொதுப் பாதை உட்பட, மேற்கு: பாபா நகர் விரிவாக்கப் பங்கா மற்றும் பாதை. இந்த சொத்தானது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்ட எல்லைக்கு உட்பட்டு உள்ளது. **அட்டவணை** B - அட்டவணை A‌ல் குறிப்பிட்டுள்ள சொத்தில் பிரிவுபடாத பங்கு நிலம் 588 சதுர அடியுடன் எண்.229, மூன்றாவது தளத்தில் உள்ள 1176 சதுர அடி குடியிருப்பு பிளாட் (பொதுப்பகுதியை உள்ளடக்கி உள்ளது) கார் பார்க்கிங் உட்பட, "சாய் என்ஜினியர்ஸ் அபார்ட்மெண்ட்", செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. **சொத்து எண்.2 : அட்டவணை** A - சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மொத்த 3 ஏக்கர் 49 செண்ட் நிலத்தில் 2 ஏக்கர் 75 செண்ட் அளவுள்ள காலி நிலம். அதன் சர்வே எண். 110/3, எண்.8, அய்யஞ்சேரி கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள் : வடக்கு: அரசுக்கு சொந்தமான பயன்பாடற்ற நிலம், தெற்கு: சர்வே எண்.110/4ல் உள்ள நிலம், கிழக்கு: சர்வே எண்.110/3ல் உள்ள மீதி நிலம் டிகஜேந்திரனுக்குச் சொந்தமானது, பொதுப் பாதை உட்பட, மேற்கு: பாபா நகர் விரிவாக்கப் பங்கா மற்றும் பாதை. **அட்டவணை** B - அட்டவணை A‌ல் குறிப்பிட்டுள்ள சொத்தில் பிரிவுபடாத பங்கு நிலம் 588 சதுர அடியுடன் எண்.529, மூன்றாவது தளத்தில் உள்ள 1176 சதுர அடி குடியிருப்பு பிளாட் (பொதுப்பகுதியை உள்ளடக்கி உள்ளது) கார் பார்க்கிங் உட்பட, "சாய் என்ஜினியர்ஸ் அபார்ட்மெண்ட்", எண்.8, அய்யஞ்சேரி கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது.
தெரிந்தவரை வில்லங்கம் : இல்லை	

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற சொத்து கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்ட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் திரு **விஜயல் ஆதிநேஷன்** (+91 9941016600) மற்றும் திரு. ராஜேந்திர நதுபியா (+91 8448284515) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் VR எண் (+919152219751) ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.com‌ல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 18.09.2024 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

AUTHUM **ஆத்தம் இன்வெஸ்ட்மெண்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 707, ரஹேஜா சென்டர், ப்ரீ பிரஸ் ஜர்னல் சாலை, நாரிமன் பாயிண்ட், மும்பை 400 021. Ph.: (022) 6747 2117
Fax: (022) 6747 2118 E-mail: info@authum.com

சுவாதீனம் அறிவிப்பு

[சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002–ன் விதி 8(1)]

கீழே கையொப்பமிடப்பட்ட ஆத்தம் இன்வெஸ்ட்மெண்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்டின் ("AIIL") அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (10.05.2024 தேதியிட்ட NCLT உத்தரவின்படி, நிலையஸன்ஸ் கமர்ஷியல் பைனான்ஸ் லிமிடெட் ("RCFL") இலிருந்து AIIL க்கு கடன் வழங்கும் வணிகத்தை பிரித்ததன் விளைவாக), 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(2)வது பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதி 3–ன் விதிமுறைக்கு இணங்கவும், கடன்தாரர் 1. **ஆர். விமல் ராஜ்,** 2. **பிரவீணா கே** ஆகியோருக்கு அனுப்பிய 14 ஜூலை, 2024 தேதியிட்ட டிமாண்ட் நோட்டீஸில் குறிப்பிடப்பட்டிருந்தபடி செலுத்த வேண்டிய தொகை **ரூ.25,34,089/- (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து முப்பத்து நான்காயிரத்து எண்பத்தொன்பது மட்டும்)** மற்றும் அறிவிப்பில் கண்டுள்ள வட்டி தொகை ஆகியவற்றை மேற்சொன்ன நோட்டீஸ் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு வழங்கப